★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 83630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 22உ செவ்வாய் (6—3—56) ★ ★ வெளியூர்: மாசி 23உ புதன் (7—3—56) [இதழ் 225

16 ஆண்டுகளாக உறங்கும் பெண்

பாரிஸ், மார்ச் 5—

கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக 21 வயதான பெண் ஒருவர் தூங்கிக்கொண்டே இருக்கிறாராம்!

இத்தாலியக் குடும்பத்தில் சிகாகோ நகரில் பிறந்த அந்தப் பெண்ணுக்கு இப்போது வயது 21 என்றும், இப்போது சிகிச்சைக்காக பாரிஸ் கொண்டுவரப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

5 வயதாயிருக்கும்போது, குடல் வாத நோய்க்காக சத்ர சிகிச்சை செய்யப்பட்டதாகவும், அப்போது அந்தச் சிகிச்சைக்காக மருந்துமூலம் ஊட்டப்பட்ட மயக்கம் இன்றுவரை—16 ஆண்டுகளாக

(4-ம் பக்கம் பார்க்க)

ஆந்திரர்களிடம் நேரு சரணாகதி!

விசால ஆந்திரம் அமைக்க இசைவு

மொழிவழி மாநில அமைப்பில் முன்னோடிகளாகின்றனர் ஆந்திரர்

சுபாஷ்நகர், மார்ச் 5—

தெலிங்கானாவை ஆந்திரத்துடன் இணைத்து விசால ஆந்திரம் அமைப்பது என்று இந்திய சர்க்கார் இறுதியாக முடிவெடுத்திருப்பதாகப் பிரதமர் நேரு நிசாமாபாத் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இரண்டு மண்டல குழுக்கள் அமையும் என்றும், அவை தெலிங்கானா—ஆந்திரா வட்டாரங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் என்றும், அந்தக் குழுக்கள் குறிப்பாகக் கல்வி அபிவிருத்தி, சர்க்கார் ஊழியம் இவை பற்றி கவனித்துக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டு வட்டாரத்தவர்களின் சம்மதத்தின் பேரிலேயே, விசால ஆந்திரம் அமைக்கப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திரர்களிடத்தில் பிரதமர் நேரு சரணாகதி அடைந்திருக்கிறார்—விசால ஆந்திர அமைப்பிற்கு இணங்கியதின் மூலம்!

துவக்கம் முதலே விசால ஆந்திர அமைப்பிற்கு அவர் ஒப்புதல் தருபவராக இருந்து வந்தபோதும்கூட இப்போதுதான் சர்க்காரின் முடிவைத் திட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

மாநில புதுஅமைப்புக் குழுவினர், ஐதராபாத் துண்டாடப்பட்டு மராமத்வாடி மராட்டியத்திலும், கர்நாடகப் பகுதிகள் மைசூரிலும் இணைந்த பிறகு எஞ்சும் தெலிங்கானா தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்றும, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஆந்திரத்துடன் அது இணைவது பற்றி சட்டசபை முடிவு செய்யும் என்றும் சிபாரிசு வழங்கியிருந்தனர்.

இப்போது விசால ஆந்திரம் உடனடியாக அமைந்துவிட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. புது மாநிலங்கள் இந்தியா வெங்கும் அமைக்கப்படும்போதே விசால ஆந்திரம் அமைந்துவிடுகிறது.

மொழி வழி மாநில அமைப்பில் முன்னோடிகளாக ஆந்திர மக்கள் விளங்குகிறார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதி செய்திருக்கிறது, விசால ஆந்திர அமைப்பிற்கு நேரு இணங்கியிருப்பது!

தலைமை நிலையச் செய்தி

மாநில மாநாடு

ஏற்பாடுகளைக் கவனிக்க

அண்ணா வருகை

திருச்சியில் மே திங்கள் 17, 18, 19, 20-ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனித்து ஆவன செய்ய அண்ணா அவர்கள்மார்ச் 11-ந் தேதியிலிருந்து 20-ந் தேதிவரை திருச்சியில் தங்கியிருப்பார்கள்.

அண்ணா அவர்களுடனிருந்து துணைபுரிய தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும் 11-ந் தேதி ஈரோட்டிலிருந்து புறப்பட்டுத் திருச்சிவந்து சேருவார்.

ஊழல் நாற்றத்தூடே புகழ் மணம் கமழ்கிறதா?

துர்காபூர் உருக்குத் தொழிற்சாலை அதிகாரி கைது

பெரும் புகார்கள் எழுந்துள்ளனவாம்

புதுடில்லி

பண்டித நேருவின் தலைமையில் இயங்கும் சர்க்கார் நிர்வாகம், எத்தனை ஊழல் மலிந்தது என்பதை நாடு நன்கறியும், ஊழல்கள் நாற்றமடிப்பது குறித்து பெரிய மனிதர்கள் கவலைப் படுவதாகவே காணோம். அது மட்டுமல்ல; அவர்கள், ஊழல்களை எடுத்துரைப்போரின் வாயை அடக்க, 'பெரிய ஒரு நிர்வாகத்தில் இப்படிச் சிறிய தவறுகள் நிகழ்வது தவிர்க்க முடியாதது' என்றெல்லாம் சமாதானம் வேறு கூறுகின்றனர்.

தங்கள் திறமைக்குறைவால் ஏற்பட்ட ஊழல்களுக்குச் சப்பைக்கட்டுச் செய்வதால், மேலும் துணிவுடன் அதிகாரிகள் ஊழல்களில் மூழ்கித்திளைக்கின்றனர். அதற்கு எடுத்துக்காட்டு இதோ!

துர்க்காபூர் உருக்குத் தொழிற்சாலை இன்னும் நிர்மாணக் கட்டத்தில்தான் இருக்கிறது. அந்த நிர்மாணங்களில் பொறுப்பான பதவி வகித்த அதிகாரி மீது, பதவிக்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே 'புகார்'கள் கூறப்பட்டனவாம். என்ன புகார்கள் என்பது தெரியவில்லை.

ஆனால் அந்த அதிகாரியை வேலையிலிருந்து நீக்கிவைத்ததுடன் நில்லாது, சிறைப் படுத்தியிருப்பதிலிருந்து அவர் மீது பெரும் இலஞ்சப் புகார்கள் தான் கூறப்பட்டிருக்க வேண்டும்; அல்லது, பெருந்தொகை மோசடி செய்திருக்க வேண்டும் என்று யூகிக்க இடமிருக்கிறது.

இந்தத் தகவலை மக்கள் சபையில் தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ தெரிவித்திருக்கிறார்.

வளர்ந்துகொண்டே செல்லும் இந்த நிர்வாக ஊழல் நாற்றத்தினூடேதான், பெரிய மனிதர்களின் புகழ் மணம் கமழுவதையும் நுகர்கிறார்கள் போலும், அவரது ஆதரவாளர்கள்!

கன மின்சார இயந்திரத் தொழிற்சாலை

சென்னையில் அமையக்கூடுமாம்

கனம் சுப்பிரமணியம் தரும் தகவல்

ஆசையூட்டுகிறாரா? தானே நம்புகிறாரா? நல்லெண்ணத்தோடுதான் கூறுகிறாரா?—என்று தெரியவில்லை; ஏனெனில், கூறுபவர் கனம் சுப்பிரமணியம்!

'உத்தேசிக்கப்பட்டுள்ள கனமின்சார இயந்திரத் தொழிற்சாலை சென்னையில் நிறுவப்படலாம்' என்று பாதுகாப்பாகப் பேசியிருக்கிறார், சட்டசபையில்!

இரண்டாம் திட்டம் பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே, இந்த ஆசையூட்டும் தகவலையும் அவர் தந்திருக்கிறார்.

வேறொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், சென்னை சர்க்கார் தயாரித்த சுமார் 400 கோடி ரூபாய் திட்டம் எப்படி திட்டக் குழுவால் ரூ. 170 கோடி அளவுக்கு வெட்டி எறியப்பட்டது என்ற சோகக் கதையைக் கூறி, நீலிக் கண்ணீரும் வடித்தாராம், கனம் சுப்பிரமணியம்!

பாக். குடியரசின் முதல் தலைவர்

மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா தேர்ந்தெடுக்கப்பட்டார்

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலாகப் பொறுப்பிலிருக்கும் மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஜா, புதிய அரசியல் சட்டத்தின் கீழ் இடைக்கால குடியரசுத் தலைவராக, அரசியல் நிர்ணய சபை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்திருப்பதாக கராச்சியிலிருந்து செய்தி தரப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதியாக ஜெனரல் மீர்ஜா வரும் மார்ச் 23-ந் தேதியன்று பூர்வாங்க முறையில் பதவி ஏற்பார் என்று தெரியவருகிறது.

அன்றுதான் பாகிஸ்தான் குடியரசாகப் பிரகடனம் செய்யப்படவிருக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தின் கீழ் தேர்தல் நடத்தி புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரை ஜெனரல் மீர்ஜா அப்பதவியை வகித்து வருவார்.

சுஹ்ரவர்த்தி உள்ளிட்ட 20 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜெனரல் மீர்ஜாவின் தேர்தலை எதிர்க்கவும் இல்லை; வேறு எவர் பெயரையும் பிரரேபிக்கவும் இல்லை.

ஐ.நா. வரவு-செலவுதிட்டம்

இந்த ஆண்டில் ஐ. நா. சபையின் வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்தியா 13,39,360 டாலர் தந்திருப்பதாக பிரதமர் நேரு டில்லி மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்,

இலங்கையில் வரட்சி!

கொழும்பு, மார்ச் 5—

இலங்கையில் கடுமையான வரட்சி ஏற்பட்டிருக்கிறதாம். இதன் விளைவாக ஒரு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பதாகக் கூறப்படுகிறது வாரத்திற்கு ஒருமுறை தேயிலை கிள்ளுவது இப்போது 15 நாளைக்கு ஒருமுறையாகியுள்ளதாம்.

வரட்சி நீடிக்குமானால், தேங்காய் உற்பத்தியிலும் 25 சதவிகிதம் குறைந்துவிடுமென்றும் அஞ்சப்படுகிறதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், புதிதாக மொத்தம் 60 பாலங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. முதல் திட்டத்தின் கீழ், இதுவரை மொத்தம் 26 பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; மேலும் 31 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

வரவு-செலவுத் திட்ட விவரங்கள்

வெளியானது பற்றி மேலும் விபரங்கள்

புதுடில்லி, மார்ச். 5—

வரவு-செலவு திட்டபிரரேபணைகள் வெளியானதற்கு தனது பிரசங்க அச்சுப்பிரதியின் 'புரூப்' முன்னதாக வெளியானது காரணமாக இருக்கலாம் என்று நிதி மந்திரி சி. டி. தேஷ்முக், மாநிலங்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இது சம்பந்தமாகப் பம்பாயிலிருந்து தனக்குவந்த கடிதம் ஒன்றைக் கம்யூனிஸ்டு உறுப்பினர் ஒருவர் படித்துக் காட்டினார். 'பட்ஜெட்' பிரரேபணைகள் அடங்கிய பிரதிகள், பிப்ரவரி 26, 27, 28-ந் தேதிகளன்று முறையே ரூ. 1000, ரூ. 100, ரூ. 50 என்று விற்கப்பட்டதாக அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

போலீஸ் விசாரணை நடைபெறுவதாயும், இது முடிவுற்ற பின்னர்தான் மேற்கொண்டு ஏதேனும் நடவடிக்கைகள் எடுப்பது இயலும் என்றும் நிதி மந்திரி தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

5,000 ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 5—

இங்குள்ள 43 வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 5,000 ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். முக்கியமான ஏற்றுமதி—இறக்குமதி நிறுவனங்களையும், கப்பல் எண்ணெய் நிறுவனங்களையும் வேலை நிறுத்தம் பாதித்திருக்கிறது.

சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக அவர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்.

பிச்சை எடுக்கக் குழந்தைகள்!

வாடகைக்கு தரப்படுகின்றனராம்!

பிச்சைக்காரர்கள் தம் தொழிலில் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக, சில ஏழை ஆந்திரக் குடும்பத்தினர் தம் குழந்தைகளை வாடகைக்கு விடுவதாக ஆந்திர சட்டசபையில் பால வெங்கட சுப்பையா என்ற தாழ்த்தப்பட்ட உறுப்பினர் தகவல் தந்திருக்கிறார்.

'வாடகை'க்குக் கிடைக்கும் குழந்தைகளைத் தம் தொழிலில் உபயோகித்துக் கொண்ட பிறகு ஒருநாள் வருமானத்தில் எட்டு அணா அல்லது ஒரு ரூபாயை அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் பிச்சைக்காரர்கள் கொடுத்து விடுகிறார்களாம்!

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—3—'56 செவ்வாய்

சென்னை மந்திரிகளுக்குத் தெளிவு பிறக்குமா?

“சில்லரை விவகாரங்களுக்கேந்தி நிற்கிற நிலை அவரது

குக் கூட டெல்லிக்கு வருமாறு சென்னை மந்திரிகள் 'சம்மன்' செய்யப்படுகிறார்கள்,” என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் சென்னை மேல் (சட்ட) சபையில் மிக்க வருத்தத்தோடு எடுத்துரைத்திருக்கிறார்.

டெல்லிக்கும் சென்னைக்கும்—வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள 'உறவி'ன் விளைவால், சென்னை மந்திரிகளுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையைச் சுட்டுக் காட்டுவதாக அமைந்திருக்கிறது, அவரது இந்தக் கருத்து. வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத வகையில், தங்கள் ஆதிக்கப் பிடிப்பில் தென்னாடு சிக்கிக் கொண்டிருக்கிறது என்பதால் கிடைக்கும் பெருமையால்-ஏற்பட்ட அகங்காரத்தால் வடநாட்டவர் தென்னாட்டவரை நடத்திவரும் போக்கு குறித்து நாம் பலகாலமாக எழுப்பிவரும் குரலுக்கு இது உரமூட்டுவதாயுள்ளது.

வடவர் ஆளுபவர்களாகவும், தென்னவர் ஆளப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதால்தான் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் வருத்தத்தோடு எடுத்துக் காட்டியிருக்கிற அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

'ஒரு மாநிலத்தின் மந்திரிகள்—அந்த மாநில மக்களின் பிரதிநிதிகள்—ஜனநாயக அரசு முறைப்படி ஆளும் அதிகாரம் பெற்றவர்கள்,' என்பதை மட்டும் சென்னைமாநில மந்திரிசபையினர் கூறிக்கொள்கின்றனர் அடிக்கடி.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மக்களிடமிருந்து அவர்களை ஆளும் அதிகாரத்தைக் கேட்டுப் பெற்றுள்ள ஆட்சியாளர்கள், அந்தக் குறிப்பிட்ட காலத்தில்—தாங்கள் ஆட்சியிலிருக்கும் காலத்தில்—அந்த மாநில மக்களின் உயர்வு-தாழ்வுகளுக்குப் பொறுப்பானவர்கள் என்பதை நமது சென்னை மாநில மந்திரிகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், இதனை சென்னை மந்திரிகளுக்கு நன்றாக இடித்துரைத்திருக்கிறார். இந்த மாநிலத்தின் பிரதிநிதிகள், அடிக்கடி, டில்லியின் ஏவலுக்கு ஒப்ப, 'எடுபிடி'கள் போல டில்லி சென்று வருவது, இந்த மாநில மக்களின் கௌரவத்திற்குப் பெரும் இழுக்கு தேடித் தருகிறது என்பதை அவர் மனம் நொந்து எடுத்துரைத்திருக்கிறார். இந்தக் கருத்துரை, நமது மாநில மந்திரிகளுக்கு இதுகாறும் ஏற்படாது போய்விட்ட தன்மான உணர்வை இனியேனும் பெற உதவும் என்று நாம் நம்புகிறோம்.

திட்டக் குழுவினர், சென்னைக்கு இழைத்துள்ள அநீதி கண்டு கொதித்திருக்கிறார் டாக்டர் இலட்சுமணசாமி; டில்லியிடம் 'பிச்சை'க் கோரி கை

உள்ளத்தை வெகுவாக வாட்டியிருக்கிறது.

“சென்னையின் திட்டங்களுக்கு திட்டக் குழு பணம் ஒதுக்க மறுத்து விடுமானால் நாமாகவே அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வழிகாண வேண்டும்; பிறரை எதிர்பார்க்காது, நாமாகவே நமது காரியங்களைக் கவனிக்க முயற்சிக்க வேண்டும்” என்ற அவரது கருத்தினைக் கூர்ந்து நோக்குபவர்களுக்கு, சில ஆழ்ந்த அரசியல் உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

'மத்திய சர்க்காரிடமிருந்து, 'பிச்சை' வாங்கும் முறை மிகத் தீங்கு பயக்கக்கூடிய ஒன்றாகும்—நமக்கு இழிவு தேடித் தரத்தக்கதாகும்' என்ற அவரது எச்சரிக்கை, சென்னை மந்திரி சபையின் கண்களைத் திறக்க வேண்டும் என்பது நம் அவா.

திராவிட முன்னேற்றக் கழகம், இத்தகு உண்மைகளைத் தெளிவான நடைமுறைச் சம்பவங்கள் எனும் வெளிச்சத்தில் நிறுத்தி உற்று நோக்குமாறு கூறினாலும்கூட, நமது மாநில ஆட்சியாளர் அவற்றைப் பார்க்கமறுத்துவிட்டு, 'குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்கள் இந்தத் தி. மு. கழகத்தவர்' என்று ஒதுக்கிவிடக் கூடும். ஆனால், டாக்டர் இலட்சுமணசாமிபோன்ற அறிஞர்களின் கருத்தை அவ்வளவு சுலபத்தில் தள்ளிவிட முடியாது; ஏனெனில், அவர், 'எதிர்க் கட்சி ஒன்று நடத்தித் தானாக வேண்டும்' என்ற வைராக்கியம் கொண்டவராகவோ, அல்லது பதவியிலமர்ந்து பவிசு பெறவேண்டும் என்ற ஆசைகொண்டவராகவோ இருந்துகொண்டு இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை.

அவரது கருத்துரைகள், சுலபத்தில் கிடைக்கக் கூடியன அல்ல; அதுவும், இதுபோன்ற பெரும் பங்கு அரசியல் அம்சம் கொண்ட ஒரு பிரச்சினையில் அவர் கருத்தறிவித்திருப்பது சாதாரண அரசியல்வாதிகள் கருத்தறிவிப்பது போன்றதல்ல.

தன் மனதை நீண்டகாலமாக அழுத்தி வருத்திக்கொண்டிருந்த உண்மையைத்தான், விளைவுகளைத் திர்க்கமாக ஆலோசித்துவிட்டு சற்றுக் கடுமையான வாசகங்களால் எடுத்துரைத்திருக்கிறார்.

வடக்கு—தெற்கு உறவு பற்றிய நமது கருத்தின் நேரடியான பிரதிபலிப்பாக அவரது கருத்து இல்லாது போனாலும், உண்மையை இப்போதாயினும் இந்த அளவேனும் எடுத்துக் கூறியதற்காக நமது பாராட்டுதல்கள் அவருக்கு நிச்சயமாக உரியனவாகும்.

சென்னை மந்திரிகளின் இரத்தம் இனியேனும் சூடு பெற வேண்டும்; நரம்பு முறுக்கேற வேண்டும்; உள்ளம் தன்மான உணர்வால் உரம் பெற்று, தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளும் போக்கை விடுத்து, டெல்லியின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளாக இருந்தாலும், அந்த வரைமுறைக்கு உரிய கவுரவமெனும் நிலை பெறுமாறு பார்த்துக்கொள்ள முற்பட வேண்டுமென விரும்புகிறோம்.

இரண்டாம் திட்டத்தில் சென்னை மாநிலத்தின் பங்கு குறித்து டாக்டர் இலட்சுமணசாமி அவர்களின் கருத்து சென்னை அரசியலாரின் தனி கவனத்திற்குரிய ஒன்றாகும்.

செயலில் காணோம்?

புதுடில்லி, மார்ச் 4—

“இன்றைய உலகில் பழைய உற்பத்தி முறைகள் எப்படிப் பயன்படாதோ, அதே போலவே, பழைய பத்தாம்பசலி மனப்பான்மையும் பயன்படாது; பழைய மனப்போக்கையும் புதுப்பித்து, மறுமலர்ச்சி அடைந்து வரும் இன்றைய உலகுடன் ஒத்திருக்கும்படிச் செய்யவேண்டும்”

இப்படிப் பேசியவர் நேரு அவர்கள்தான்; வர்த்தக சபைக்கூட்டத்தில் கூறியுள்ளார்.

எதிர்காலச் சிற்பிகள் விஞ்ஞானிகள்தானும்!

புதுடில்லி, மார்ச் 4—

“எதிர்கால உலகில் அரசியல் வாதிகளோ, வர்த்தகர்களோ முக்கியத்துவம் பெறமாட்டார்கள். விஞ்ஞான வித்தகர்களிடமும், தொழில் நுட்ப நிபுணர்களிடமும் தான் உலகின் எதிர்காலம் இருக்கும். நம் நாட்டின் முன்னேற்றம் விஞ்ஞானத்தையும் விஞ்ஞான அறிவையும் வளர்ப்பதையே பொறுத்திருக்கிறது. மக்களுக்கு விஞ்ஞான அறிவூட்டி, நம் அன்றாட வாழ்வில் விஞ்ஞானம் பயன்படும்படிச் செய்யாவிடில் நாம் பின்தங்கி விடுவோம்” என்று வர்த்தக சபைக்கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் நேரு குறிப்பிட்டாராம்.

சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் தொழிற்சாலை, முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 337 - இரயில் எஞ்சின்களைத் தயாரித்தது. இதற்கு அத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலட்சிய உற்பத்தி அளவு 268 எஞ்சின்கள் தான்.

டெல்லியின் அகந்தைக்கு எதிராக தமிழகமெங்கணும் அர்த்தால்

தோழர் சக்கரை (செட்டியார்) யோசனை

“சென்னையை டில்லி சர்க்கார் மிகுந்த அகந்தையுடன் நடத்துகிறார்கள்; டில்லி சர்க்காரிடமிருந்து மேலும் பெரிய உதவிகளைப் பெற, சென்னை மாநிலமெங்கணும் அர்த்தால் நடத்த வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

“சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை சர்க்கார் தீட்ட வேண்டுமென்று கோருகிறேன்,”

என்று, மேல் (சட்ட) சபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசிய வி. சக்கரை (செட்டியார்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆங்கிலம் இனியும் அன்னிய மொழி அல்ல'

கல்வித் துறைத் தலைவர் கருத்து

'தரம்' குறைவதற்கான காரணங்கள் விளக்கம்

“ஆங்கிலத்தில் பேசுவதற்காக, ஒருவர் வெட்கப்படத் தேவை இல்லை. இந்தியாவை பொறுத்த மட்டில், ஆங்கிலம் ஒரு அன்னிய மொழி அல்ல; எனவே, ஆங்கில மொழியின் உபயோகத்தைக் குறை கூறக் கூடாது.

“ஒரு மொழிதான் ஒருவரின் தாய்மொழியாக இருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால், ஒருவர் ஒரு மொழியைக் கற்றுக்கொண்ட பிறகு அது அவருக்கு அன்னிய மொழியாக இருக்க முடியாது.”

—என்று, கல்வித்துறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை—மயிலை, பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, விழா ஒன்றில் கடந்த 4-ந் தேதியன்று பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“கடந்த ஆண்டில் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் 50 சதவிகிதத்தினர் மட்டுமே தேறியிருக்கிறார்கள் என்பதறிய மிக வருந்துகிறேன்.

“அந்த மாணவர்கள் 40, 35, 25 சதவிகிதங்கள் மட்டுமே தேர்வுக்கான அம்சங்களாகப் பெறவேண்டுமெனக் கோரப்படுகிறார்கள். இவ்வளவு குறைவாக இலட்சிய அளவு இருந்தும் 50 சதவிகித மாணவர்கள் மட்டுமே பரிட்சையில் வெற்றி பெற்றிருப்பது மிக வருந்தற்குரிய ஒன்றாகும்.

“இதற்குக் காரணம், மாணவர்கள் அல்ல; ஏனெனில், எவருமே பிறப்பால் அறிவில்லாதவர்கள் அல்ல; நிச்சயமாக வேறெங்கோ தவறு இருக்கிறது.

“ஞாபக சக்தி என்பது எல்லோருக்கும் பொதுவானதாகும். துரதிருஷ்டவசமாக அந்த ஞாபக சக்தி வளர்ச்சியுற வேண்டிய அவசியம் இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் அலட்சியம செய்யப்பட்டிருக்கிறது.

“மாற்றங்கள் தேவை என்ற ஆவலினால்மாணவர்கள் பாடங்களை மனனம் செய்வதை நாம் கண்டித்திருக்கிறோம்.

“இதனால் இப்போது என்ன நேர்ந்துவிட்டதென்றால், மாணவர்கள் பாடப் புத்தகங்களைத் தொடுவதும இல்லை; பாடங்களைப் பற்றி எண்ணவோ, உத்தேச கேள்வி - பதில்களைப் பற்றிச் சிந்திப்பதோ கூட இல்லை.

“இடைக்காலத்தில் பாடங்களுக்கான குறிப்பேடுகளைப் பரீட்சை நேரத்தில் படிப்பது கூட இப்போது இல்லாது போய்விட்டது. எனவே, மாணவர்களின் சாதாரணமான அறிவு அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது; தூண்டப்படவே இல்லை.

“எனவே, இப்போதாயினும் நாம் விழித்துக்கொண்டு மேலும் கல்வித்தரம கீழிறங்காமல்—அழிந்துபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்.”

சென்னை மந்திரிகளின் பொய்யுரை!

உண்மையை திரு-கொச்சி முதல் அமைச்சர் அம்பலப்படுத்துகிறார்!

சென்னை முதன் மந்திரி காமராசர், மற்றும் நிதி மந்திரி சுப்பிரமணியம் ஆகியோர் எவ்வளவு பெரிய 'பொய்யர்கள்' என்பதைத் திரு—கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் அம்பலமாக்கியிருக்கிறார்.

'வட்டார மாநிலங்கள் அல்லது பன்மொழி மாநிலங்கள் அமைப்பது, தென்னாட்டைப் பொறுத்து தட்சிணப் பிரதேசம் அமைப்பது குறித்துக் காங்கிரஸ் மேலிடமோ, பிரதமர் நேருவோ எதுவும் எங்களிடம் கூறவில்லை; நாங்களாகவேதான் கூடி விவாதித்தோம்' என்பதாகச் சென்னை மந்திரிகள் பேசிவந்தனர்.

ஆனால், திரு-கொச்சி முதன் மந்திரி, 'பன்மொழி மாநிலம் அமைப்பதற்குள்ள வழி வகைகளைக் கண்டறியுமாறு பிரதமர் நேருதான், தென் மாநில மந்திரிகளுக்கு யோசனை கூறினார்' என்று திருவனந்தபுரத்தில் கூறியிருக்கிறார்.

யோசனை கூறினாரா? கட்டளையிட்டாரா?—என்பது வேறு விஷயம்; ஆனால், 'தட்சிணப் பிரதேசம் குறித்து தென்னாட்டு மந்திரிகள் பேசவேண்டும் என்று விரும்பியது பிரதமர் நேருதான்' என்பது முன்பே தெரிந்ததுதான் என்றாலும், இப்போது பனம்பள்ளி உண்மையை வெளிப்படையாகச் சொல்லி, சென்னை மந்திரிகளின் பொய்யுரையை அம்பலமாக்கியிருக்கிறார்.

பரம்பிக்குளம் திட்டம்

பரிசீலனை செய்ய திரு-கொச்சி சர்க்கார் மறுத்துவிட்டனராம்

சென்னை, மார்ச். 2—

திரு-கொச்சி மாநிலத்தில் பரம்பிக்குளம் திட்டத்தைச் சேர்ந்த பகுதிகளைப் பரிசீலனை செய்ய சென்னை மராமத்து இலாகா அதிகாரிகளை அனுமதிக்கும்படி திரு-கொச்சி சர்க்காரை கேட்டதாகவும், அதற்கு அனுமதிதர மறுக்கப்பட்டதென்றும் மராமத்து அமைச்சர் ஆர் சண்முக இராஜேசுவர சேதுபதி மேல் (சட்ட) சபையில் தெரிவித்திருக்கிறார்.

இது மத்திய சர்க்காருக்கும், திட்டக் குழுவிற்கும் அறிவிக்கப்பட்டது என்றும், தண்ணீர் தகராறு மசோதா சட்டமாகும்வரை காத்திருக்கவேண்டுமென்றும் கூறினாராம்.

ஐக்கிய கேரளம் அமைக்க வேண்டுமென வற்புறுத்துவதற்காகத் தன்னைச் சந்திக்க வந்த தூதுக் குழு ஒன்றிடம் பேசுகையில், 'கேரள மாநிலம் அமைக்க வேண்டும் என்ற திட்டம் கைவிடப்படவில்லை; நேரு பண்டிதர் கூறிய பன்மொழி மாநில அமைப்பு யோசனையை நாங்கள் விவாதித்த நிலையிலேயே கேரள மாநில அமைப்புத் திட்டத்தை நாங்கள் கைவிட்டதாகாது,' என்று திரு-கொச்சி முதலமைச்சர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

வண்டி தந்து வருந்தி அழைத்தனர்

வர்த்தகர்களோ காங்கிரசார் முகத்தில் கரி பூசினர்

இராமநாதபுரத்தில் அர்த்தால் வெற்றி

இராமநாதபுரத்தில் (முகவை) பிப் 20 அர்த்தால் மிக வெற்றிகரமான முறையில் நடைபெற்றது. சர்வகட்சி கூட்டணியாரின் வேண்டுகோளுக்கிணங்க வியாபாரிகள், தொழிலாளர், மாணவர்கள் ஆகிய எல்லோரும் அர்த்தாலில் பூரணமாக பங்கு கொண்டார்கள். உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் வியாபாரிகளை அவரவர் இல்லங்களில் சென்று வண்டி மூலம் அழைத்து வந்து கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்தும், வியாபாரிகள் மறுத்து விட்டது காங்கிரஸ்காரர்களின் முகத்தில் கரியை பூசியதுபோன்று இருந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் காங்கிரஸ்களுக்குப் பல வழிகளில் உதவி செய்தும் வியாபாரிகள் மனதைக் கெடுத்து விடமுடியவில்லை.

மாலை 5 மணிக்கு மணிக்கூண்டிலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்கள் வழியாக வந்து 7 மணிக்கு அரண்மனை முன்பு வந்து அடைந்தது.

மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. பி. எஸ். மணி, சேக்சுல்தான், இராமகிருஷ்ணன், சுப்பிரமணி, மீனாட்சிசுந்தரம், ஆவுடையப்பன் ஆகியோர் சொற்பொழிவுக்குப் பின் தமிழர் உறுதிமொழி கூட்டத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

நகரின் அமைதி கெடாமலும் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெறவும் நகரின் சர்வகட்சி கூட்டணியினர் வெகுவாகப் பாடுபட்டனர்.

★

அம்மாபட்டி

அமைதியாக இங்கு அர்த்தால் நடைபெற்றது; மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; பொது வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்; மாலை 4 மணிக்கு சர்வகட்சிக் கூட்டணியின் சார்பில் ஊர்வலம் நடைபெற்று, உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அல்லிநகரம்

பொது வேலைநிறுத்தம் இங்கு அமைதியாக நடைபெற்றது 117 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் தேனி, அல்லிநகரம் தவிர பொம்மைய கவுண்டபட்டி, அன்னஞ்சி, பூதிப்புரம், குன்னூர், அம்மச்சியபுரம், வீரபாண்டி தோழர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

சிறந்த வியாபார ஸ்தலமான தேனி மயானமாகக் காட்சித் தந்தது. பொதுவாக தேனி, அல்லி நகத்தில் மொத்தம் 5, 6 கடைகளைத் தவிர, மற்றெந்தக் கடைகளும் திறக்கப்படவில்லை. 4 பஞ்சாலைகளும், 10 அரிசி மில்களும் மூடிக்கிடந்தன. பஸ்கள் ஓடியதாயினும், ஒவ்வொரு பஸ்களிலும் ஓரிருவரே பிரயாணம் செய்தனர். நடுப்பகலுக்குமேல் வெறும் பஸ்களே ஓடின. சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லை. பள்ளிகளும் வெறிச்சோடிக் கிடந்தன. வகுப்புகளுக்கு ஒரு சிலரே சென்று வந்தனர். வராத மாணவர்களையும் 'ஆஜர்' பதிவு செய்து கொள்ளப்பட்டது.

பொதுவாகக் காங்கிரஸ்காரர்களின் எதிர்ப்பு பலமாக இருந்த போதிலும் போலீஸ் இரண்டு இடங்களில் தடியடிப் பிரயோகம் செய்தும், அரைமணிக்கொருதடவை ஊர்வலமும், பொதுக் கூட்டமும் பொது மக்களின் ஆதரவோடு மாறிமாறி அமைதியாக ஆனால் எவ்வித அசம்பாவிதமுமின்றி நடைபெற்று, பொதுவேலை நிறுத்தம் வெற்றியடைந்தது.

கண்டமங்கலம்

கடைகள், ஆலைகள், பள்ளிகள் யாவும் மூடிக்கிடந்தன; தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை தோழர் என். ஆர். முருகையன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு சர்வ கட்சி பொதுக்கூட்ட மேடையை வந்தடைந்தது. தோழர் வை. இராமசாமி தலைமையில் தோழர்கள் எஸ் ஜெகநாதன், என். ஆர். முருகையன், என். ஆர். இராமசாமி, ரா. ந. இராமலிங்கம், ஐ. கே. மூர்த்தி, கோவிந்தராசன், செ. நாராயணசாமி, ஆறுமுகம் ஆகியோர் பேசியபின், உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேட்டுப்பாளையம்

அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. சினிமாக் கொட்டகைகளும், எல்லாக் கடைகளும் மூடிக் கிடந்தன ; அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

வெள்ளாழப்பட்டி

முழு வெற்றியுடன் அர்த்தால் நடைபெற்றது. கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன ; பள்ளிக்கு மாணவர்கள் செல்லவில்லை ; விவசாயிகள் வேலைக்குச் செல்லாமல் ஒத்துழைத்தனர்.

கணபதி (கோவை)

பொதுவேலை நிறுத்தம் அமைதியான முறையிலே நடைபெற்றது. பள்ளிகள், உணவு விடுதிகள், வணிக நிலையங்கள், பஞ்சாலைகள் எல்லாம் மூடிக்கிடந்தன. மாணவர்கள் தொழிலாளர்கள் அனைவரும் பொதுவேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர். அர்த்தால் அமைதியான முறையில் சிறப்பாக நடைபெற்றது.

வெங்கிடங்கால்

கடைகள் எல்லாம் மூடப்பட்டன; விவசாயிகள் வேலைக்குச் செல்லவில்லை; அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது.

அரியநகர்—புதுவை

எல்லாத் தொழிலாளர்களும் புதுவை மில்களில் வேலை செய்ய செல்லவில்லை; எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; காங்கிரஸ் சார்பிலுள்ளவர்களின் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன; இச் செய்தியை, தோழர்கள் புதுவை சர்வகட்சிக் கூட்டணி தலைவர்களிடம் சென்று அறிவித்தார். உடனே தோழர்கள் பாரதிதாசன், வி. சுப்பையா, சு. பெருமாள், அவோக்கா (வழக்கறிஞர்) இவர்கள் வந்து, கடையைத் திறந்து வைத்திருந்தவர்களை, மூடிவிடும்படி வேண்டிக் கொண்டனர்; உடனே யாவரும் தங்கள் கடைகளை மூடிவிட்டனர்; ஊரின் எந்தப் பகுதியிலும் கலவரமில்லை.

தோழர்கள் மா. சின்னப்பிள்ளை, துளசிங்கம், நரசிங்கம் ஆகியோர் தலைமையில் 500-க்கு மேற்பட்டவர்கள் அடங்கிய ஊர்வலம் ஒன்று மாலை 4 மணியளவில் இங்கிருந்து கிளம்பி, புதுவையில் நடைபெற்ற சர்வகட்சி ஊர்வலத்தில் கலந்து கொண்டது.

புஞ்சைத்தலையூர்

தி. மு. கழகத் தோழர்கள் 9 பேர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு 2—3—56 மாலை 4 மணியளவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது மூவனூர் தோழர்கள் 7 பேர்களையும்சேர்த்து விசாரிக்கப்பட்டது. மாஜிஸ்திரேட் தலா ரூ. 1 அபராதம் விதித்தார்.

ஒன்றுபடும் அம்சங்களே அதிகம்!

இந்தியா - இங்கிலாந்து கொள்கை குறித்து பாயட்

பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா மந்திரி லெனுக்ஸ் பாயட், இந்தியப் பிரதமர் நேருவுடன் கடந்த சனிக்கிழமையன்று 2 மணி நேரத்திற்கும் அதிகமாகஉலக விவகாரங்கள் குறித்து உரையாடியிருக்கிறார்.

அதன் பின்னர், அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து பேசிய பாயட், இங்கிலாந்தும்—இந்தியாவும் ஒத்துப்போகக்கூடிய விவகாரங்களைக் குறித்தும் மாறுபட்ட கருத்துக்கொண்ட விவகாரங்களைக் குறித்தும் விளக்கம் தந்திருக்கிறார்.

ஆங்காங்கே இராணுவ ஒப்பந்தங்கள் செய்துகொள்வது, ஐ. நா. சாசனத்திற்கு உடன்பாடானதுதான் என்றும், அவை, எந்த நாட்டையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டன அல்லவென்றும், தற்காப்பு நோக்கத்துடன் மட்டுமே அவை பிறந்திருக்கின்றன என்றும், பிரிட்டன் உறுப்பினராகவிருக்கும் எந்த ஒரு ஒப்பந்த நிறுவனமும் ஆக்கிரமிப்பிற்கு முயற்சிப்பதை பிரிட்டன் ஏற்காது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்தகு இராணுவ ஒப்பந்தங்கள், உலக சமாதான ஆக்கத்திற்கு உகந்தவை அல்ல என்பதை இந்தியா தெளிவாக்கியிருப்பது தெரிந்ததே.

பாயட் மேலும் பேசுகையில், இந்தியாவும்—பிரிட்டனும் ஒத்துப் போகக்கூடியதாக ஜனநாயகம் தனி மனித உரிமை இவற்றைப் பாதுகாப்பது என்ற பிரச்சினை இருக்கிறது என்றும் 'வேறுபடுகிறோம் என்பதை சுதந்திரமாக எடுத்துக் கூறி வாதிடுகிற உரிமை வேண்டும் என இரு சாராரும் கோருகின்றனர் என்றும் விளக்கம் தந்திருக்கிறார்.

இந்தியா, இங்கிலாந்து இவற்றின் வெளி விவகாரக் கொள்கைகளில் வேறுபடும் அம்சங்களைவிட ஒன்றுபடும் அம்சங்களே அதிகம் என்றும் பாயட் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி தற்போது 37 கோடி டன்னாக இருப்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 6.0 கோடி டன்னாகப் பெருக்குவதென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பி. சி. ஜி. மருந்து குத்தும் ஏற்பாட்டுக்காக, 1955—56ம் ஆண்டு இறுதிவரை மொத்தம் ரூ. 1,43,87,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில், இந்திய சர்க்கார் ரூ. 22,06,000-மும், மாநில சர்க்கார்கள் ரூ. 1,21,81,000-மும் செலவிட்டுள்ளனர்.

போடிநாயக்கனூரில் 19 தோழர்கள் கைது

போலீசார் தடியடிப் பிரயோகம்

போடிநாயக்கனூரில் (மதுரை மாவட்டம்) கடை அடைப்பும் பொது வேலைநிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றது.

நகரில் 144 தடையுத்தரவு விதிக்கப்பட்டதால் நகர தி. மு. கழக செயலாளர் தோழர் மா. பெரியசாமி, தோழர்கள் ஆர். கே. சென்னையசாமி, ஆர். குப்புசாமி, ஆர் சோலைமுத்து, எம். முத்தையா ஆகியோர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர்.

144 தடை உத்தரவை மீறிய தோழர்கள் சி. தமிழன்பன், தம்பித்துரை என்ற சரீப்கான், வி. எஸ். பாண்டியன், எஸ். ஏ. செல்லப்பா ஆகிய தி. மு. கழகத் தோழர்கள் உட்பட 19 பேர் கைது செய்யப்பட்டு 21-ம் நாள் பெரியகுளம் கொண்டு செல்லப்பட்டு அங்கு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான தோழர்களை போடிநாயக்கனூர் நகர மக்கள், வரவேற்பளித்து நகரின் முக்கிய வீதிகளின் வழியாக அழைத்து வந்து தாண்டன் பழனியாண்டி திடலை வந்தடைந்தனர். சர்வ கட்சித் தலைவர்களின் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

குறிப்பு :—144 தடை மீறிய தோழர்கள் மீது போலீசார் அத்துமீறி தடியடிப் பிரயோகம் செய்தனர்.

தேரோடும் திருவிழாவும் நடைபெறவில்லை

பூந்தமல்லியில் அர்த்தால் விபரம்

தேரோடும் திருவிழா நடைபெறவில்லை ; ஒத்திவைக்கப்பட்டது. 'அர்த்தால் வேண்டாம்' என வேண்டிக் கேட்டுக்கொண்ட காங்கிரசாரும் அன்று காலை கடையடைப்புச் செய்தனர்.

தோழர்கள், சர்வ கட்சிக் கூட்டணியினர் 24 பேர் கைது செய்யப்பட்டும் பிப். 20 பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக பூந்தமல்லி நகரில் நடைபெற்றது.

19—2—56ல் கைது செய்யப்பட்ட 24 தோழர்களில் 20 பேர்கள் தி. மு கழகத் தோழர்களாவர்.

முதல் நாள் வரையில், 'கடையடைக்கவேண்டாம்; பொதுவேலை நிறுத்தம் வேண்டாம்' என்று, மக்களிடத்தில் துண்டுப் பிரசுரம் மூலம் கேட்டுக்கொண்ட காங்கிரஸ்காரர்களும் கூட பிப். 20-ந் தேதியன்று தங்கள் கடைகளை அடைத்தனர். முழு வெற்றிபெற்றது பொது வேலைநிறுத்தம்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் 21-ந் தேதியன்று இரவு 12 மணிக்கு விடுதலையாகியிருக்கின்றனர்.

தேரோடும் திருவிழா — அந்த ஊர் வரதராஜப் பெருமான் கோவில்! அந்த விழாகூட நடைபெறவில்லை—நடைபெற முடியவில்லை—பிப். 20-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தத்தால்!

பள்ளிகள், கடைகள் எல்லாம் நாள் முழுதும் மூடிக் கிடந்தன.

ஓட்டிமேடு

காலையிலும், மாலையிலும் மாபெரும் ஊர்வலமும், மாலையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது கடைகள் எல்லாம் திறக்கப்படவில்லை ; உழவர்களும் மற்ற தொழிலாளர்களும் எவ்வித வேலையும் செய்யவில்லை ; பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. அர்த்தால் அமைதியாகவே நடைபெற்றது.

****

தலைமைக் கழகம் : அறிக்கை—5/56

உறுப்பினர் சேர்த்தல்

★

பொது வேலைநிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்ததாலும், உறுப்பினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்க வேண்டும் என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் **18—3—56** வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 18-ஆம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக்கொண்டு தகுதியுள்ள மிகவான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேம்.

18—3—56-ஆம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக்கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச்சு 15-ஆம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

அறிவகம்
29—2—56
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

கலப்புத் திருமணம்

சென்னை 6-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினரும், சென்னை மாவட்டப் பிரதிநிதியுமான தோழர் எஸ். சி. சிட்டிபாபு (நாயுடு வகுப்பு) அவர்களுக்கும்—தோழியர் அன்னம்மாள் (தாழ்த்தப்பட்ட வகுப்பு) அவர்களுக்கும் 26—2—56 காலை 10 மணிக்கு, வியாசர்பாடி கணேசபுரத்தில் தோழர் கண்ணதாசன் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது; தோழர்கள் க. அறிவழகன் ஏ. கே. சாமி ஆகியோர் பேசினர்.

பாராட்டு விழாவில் அண்ணா

அன்று மாலை 6 மணிக்கு, மேற்படி மணமக்களுக்குப் பாராட்டுரை வழங்கும் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் தலைமை வகித்தார். அண்ணா அவர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினார். தோழர் க. சிதம்பரம் நன்றி கூறினார். இத்திருமணத்திற்கு ஏராளமான பொதுமக்களும் கழகத்தோழர்களும் வந்திருந்தனர்.

இத்திருமணத்தை 5-வது வட்ட தி. மு. கழகத்தினர் முன்னின்று நடத்திவைத்தனர்.

இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

அன்பளிப்பு

14-1-56-ல் சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற திராவிடர் திருநாளன்று தோழர் டி. எஸ். நடேசன் அவர்களின் ஆண் குழந்தைக்கு தோழர் மு. கருணாநிதி அவர்களால் 'பன்னீர்செல்வம்' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம் 37-வது வட்ட கிளையின் வளர்ச்சிக்கு ரூ. 1-ம் அன்பளிப்பாகத் தரப்பட்டது—'நம் நாடு' அன்பளிப்பு வரப் பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

நெய்வேலியில் நமது பிரதிநிதி

பரிசோதனையின் கடைசிக் கட்டம்

1960-ல் நிலக்கரி கிடைக்கும்

தென்னாட்டில் பெரும் தொழில் புரட்சியை உண்டுபண்ணக்கூடியது என்று வருணிக்கப்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திற்கான பரிசோதனைகளின் கடைசிக் கட்ட வேலைகள் கடந்த பிப். 29-ந் தேதியன்று நெய்வேலியில் துவங்கின.

பூமிக்கடியில் 400 அடி ஆழத்திலிருந்து அழுத்தம் மிகுந்த நீரோட்டத்தின் மட்டத்தையும், அழுத்தத்தையும், கட்டுப்படுத்துவதற்காகப் பேராற்றல் கொண்ட மின்சார பம்புகள் மூலம் தண்ணீரை இறைக்கிறார்கள். இதுதான் பரிசோதனையின் இறுதிக்கட்டம். இது வெற்றிகரமாக முடிந்ததும் நிலக்கரி தோண்டப்பட இருக்கிறது.

இந்த வேலைகள் துவங்கும் போது, சென்னையில் உள்ள பத்திரிகையாளரை இந்தியச் செய்தி இலாகாவினர் தனி பஸ் ஒன்றின் மூலம் அழைத்துச் சென்று நெய்வேலியைச் சுற்றிக்காண்பித்தனர். தண்ணீர் இறைக்கும் முறை, அதன் அவசியம், பழுப்பு நிலக்கரி தோண்டுவது எப்படி, அதன் உபயோகங்கள் என்ன? என்பவை எல்லாம் விளக்கிக் கூறப்பட்டன.

சென்னையில் உள்ள பத்திரிகைகள் பலவுடையவும் பிரதிநிதிகள் சுமார் 37 பேர் வந்திருந்தனர். 'நம் நாடு' இதழ் சார்பாக தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சென்றிருந்தார்.

அங்குள்ள அதிகாரிகள் திட்டமிட்டுள்ளபடி, 1960-ம் ஆண்டில் பழுப்பு நிலக்கரி பெரும் அளவில் கிடைக்க ஆரம்பிக்கும் என்று கூறப்படுகிறது.

கோவையில் சிறப்புக்கூட்டம்

அண்ணா பேசுவார்

கோவை நகர தி. மு. கழக நிதிக்காக 18—3—56 ஞாயிறன்று சிறப்புக் கூட்டம் நடைபெறும் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார். இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

—கோவை நகர தி. மு. க.

திருமணம்

8—3—56 காலை 9 மணியளவில் பெரிய காஞ்சீபுரம், கொசத் தெரு, 54-ம் எண்ணுள்ள ஆ முத்தியால் ரெட்டியார் சத்திரத்தில், தோழர் கெ. அ. அரங்கநாதன்—தோழியர் வள்ளியம்மை திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும். மணமக்களைப் பாராட்டி தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. டி. எஸ். மணி பேசுவர்.

தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டில் கழகங்கள்

இந்த வருந்தத்தகும் நிலைமை மாற வேண்டாமா?

புதுக்கோட்டை, மார்ச் 5—

"எப்பொருளையும் நன்கு ஆய்ந்து தொகுத்து வகுத்து முறைப் படுத்தி வெளியிடும் பண்புள்ளவர் தமிழ் மக்கள். உலகில் இன்பம் பலவகைப்படும்; அதில் இலக்கிய இன்பம் ஒருவகை. இன்பம் எது என்பது முடிவு கட்டப்பட்ட முடிவல்ல; பலரும் பலவகையாகக் கூறுவர். வள்ளுவர், 'அறத்தான் வருவதே இன்பம்' என்கிறார்.

"தமிழ் நாட்டில் சில ஆண்டு கட்கு முன்னர் தமிழிசைக்காக ஒரு போராட்டம் எழுந்தது. இது வேறு எந்த நாட்டிலும் இல்லாததொன்று. தமிழிசையினையே வெறுத்தவர்கள் உண்டு! தமிழ் மக்கள் தமிழிசையை வெறுக்கமாட்டார்கள். தமிழிசையை வெறுப்பவர்கள் தமிழராக மாட்டார்கள்.

"தமிழ் நாட்டில்தான் தமிழ் வளர்ச்சிக்காக கழகங்கள் அமைக்கப்படுவதைக் காண்கிறோம். வேறு எந்நாட்டிலும் இல்லாத ஒரு வருந்தத்தக்க நிலையாகும்! இந்நிலை மாற வேண்டும்."

என்று, திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 19—2—56ல் புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இக்கழகச் சார்பில் திரு. வி. க நிதிக்காக இரண்டாம் முறையாக ரூ. 51 திரு விசுவநாதம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

இந்திய சர்க்கார், குடிசைக் கைத்தொழில்கள், சிறு கைத் தொழில்கள் ஆகிய துறைகளிலிருந்து 1952-ல் வாங்கிய பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 1,13,00,000; 1955-ல் வாங்கியவற்றின் மொத்த மதிப்பு ரூ. 2,10,00,000.

பல்லாயிரம் தோட்டத் தொழிலாளர் பங்கு கொண்டனர்

பீர்மேடு வட்டத்தில் பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தம்

வண்டிப்பெரியார், மார்ச் 5—

பீர்மேடு வட்டத்தில் பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம் வெகு அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றிருக்கிறது.

பல்லாயிரக் கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அன்று வேலைகளுக்குச் செல்லாது, வீட்டிலேயே தங்கினர்.

வண்டிப்பெரியாரில் மட்டும் இஞ்சிக்காடு, தங்கமலை, மஞ்சிமலை, பணியாரப்பாறை, ஆனைக்கல், டைமூக், அமராவதி, முறுக்கடி, தெங்காக்கல், காரடிக்குழி ஆகிய தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் சுமார் 10,000 தொழிலாளர்கள் கட்டுப்பாடாகவும், அமைதியாகவும், அர்த்தால் கடைப்பிடித்து மாநில புது அமைப்புப் பற்றிய தங்கள் எண்ணங்களை வெளிக்காட்டினர்.

எந்தவித அசம்பாவிதமுமின்றி நடைபெற்ற இந்த அர்த்தால்போல பீர்மேடு வட்டத்தில் வேறெப்போதும் நடைபெற்றதில்லை என்று கூறப்படுகிறது.

டில்லி மக்கள் சபை உபதேர்தல்

திருவள்ளூர் தொகுதிக்கு அண்மையில் நடைபெறவிருக்கும் டில்லி மக்கள் சபை உப தேர்தலில் தோழர் ஆர். லோகநாதன் அவர்கள் சுயேச்சை அபேட்சகராக நிற்கிறார். இவரை எதிர்த்துக் காங்கிரஸ் கட்சி அபேட்சகரும், மற்றும் இருவரும் போட்டியிடுவதாகத் தெரிகிறது.

நகரில் தொத்து நோய்கள்

மஞ்சள் காமாலைக்கு 12 பேர் பலி

அம்மையும் தலைநீட்டுகிறது

சென்னை, மார்ச் 5—

கடந்த இரண்டு திங்களுக்குள் சென்னை நகரில் 23 பேருக்கு மஞ்சள் காமாலை நோய் கண்டதில் 12 பேர் இறந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இது குறித்து தனி கவனம் செலுத்துமாறு ஆஸ்பத்திரி அதிகாரிகளை நகர சபை கேட்டுக் கொண்டிருக்கிறதாம்.

கடந்த மார்ச் 3-ந் தேதியுடன் முடிந்த ஒரு வாரத்தில் 6 பேர்களுக்கு வைசூரி கண்டதாயும், அதில் ஒருவருக்கு மரணம் சம்பவித்ததாயும் தெரிகிறது.

நகரில் ஆங்காங்கே வைசூரி ஏற்பட்டு வருவதால் பொதுமக்கள் மீண்டும் அம்மை குத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; வைசூரி ஏற்பட்டால் உடன் தகவல் தருமாறு பொதுமக்களும், டாக்டர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சென்னையில் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை

5-பேர்மீது வழக்கு தொடரப்பட்டது

பிப். 20-ம் தேதியன்று கைது செய்யப்பட்ட சர்வ கட்சித் தோழர்கள் 43 பேர் ரிமாண்டில் வைக்கப் பட்டிருந்தனர். மேலும் 5 பேர் மீது 75-வது செக்ஷன்படி குற்றம் சாட்டி போலீஸ் காவலில் வைத்திருந்து மறுநாள் காலை 7 மணி வழக்கு மன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். அந்த ஐவரும் 75-வது செக்ஷனை மறுத்து வாதாடவே வழக்கு 28-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்கள் 21-ம் தேதி அன்று சிறைக்குச் சென்று கைதான தோழர்கள் அனைவரையும் சந்தித்தார். தோழர்களுக்கு 20-ம் தேதியிலிருந்து 21-ம் நாள் வரை சிறையில் உணவு கொடுக்காதது அவர்கள் தெரிவிக்கவே அனைவருக்கும் பழங்கள் வாங்கித் தந்து உண்ணச் செய்தார். மறுநாள் போலீசார் கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட 43 பேரை விடுதலை செய்யப்பட்டனர்.

ஐந்து பேர்மீது 28-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்ட வழக்கானது விசாரணை செய்யப்பட்டது. அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்; அன்றைய வழக்கு விசாரணைக்கு சென்னை மாவட்டச் செயலாளர் சென்றிருந்து, வழக்கு முடிந்ததும் தோழர்களைச் சந்தித்தார் என்று சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

எழுமலை தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்

பிப். 20-ல் கைது செய்யப்பட்ட தோழர்கள் இரா. சு தங்கராசன் கே. பரமசிவம், கே. ஆனந்தகிருட்டிணன், காசிநாதன், எம். ஆர். சேகர், எம் செல்லையா, கே. சுப்பிரமணி, எ. வாசிமலை வி சதாசிவம், எஸ் சின்னச்சாமி பி. வேல்சாமி ஆகியோர் 24—2—56ல் விடுதலை செய்யப்பட்டனர்.

புயல் நிவாரண நிதி

திருச்சி மாவட்ட அரசு நிலையம் தி. மு. கழகச் சார்பில், புயல் நிவாரண நிதிக்கென ரூ. 7 அனுப்பப்பட்டுள்ளது—பெற்றுக்கொண்டோம்.

திருத்தம்

16—2—56-ந் தேதி 'நம் நாடு' இதழில் வெளிவந்துள்ள புயல் நிவாரண நிதி அளிப்புச் செய்தியில், 'கிருஷ்ணகிரியில் இருக்கும் 18-ம் பீரங்கிப் படை' என்றிருப்பதை 'இராணுவத்தில் உள்ள 18-ம் யுத்த பீரங்கிப் படை என்று திருத்தி வாசித்துக்கொள்க.

—தி. மு. க. தலைமை நிலையம்

பாலாறு நீர் பங்கீடு: முடிவேதும் இல்லையாம்!

சென்னை, மார்ச். 3—

"சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் மத்திய சர்க்கார் பிரதிநிதி முன்னிலையில் நடைபெற்ற மைசூர் சென்னை எஞ்சினியர்கள் பாலாறு நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி நடத்திய பேச்சுகளில் முடிவு ஏதும் செய்யப்படவில்லை" என்று, சென்னை மராமத்து இலாகா அமைச்சர் ஆர். சண்முக இராஜேசுவர சேதுபதி மேல் (சட்ட) சபையில் பதிலளித்துள்ளார்.

தற்போது இந்தியாவில் சிமிட்டி உற்பத்தி ஆண்டிற்கு 48 இலட்சம் டன்னுக இருந்து வருவதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 100 இலட்சம் டன்னுகப் பெருக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

16 ஆண்டுகளாக...

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

எரியும் தெளியவே இல்லையாம்!

ஊர்த் எனும் இடத்திருக்கு சென்றால் ஆச்சரியகரமாக இந்த மயக்கம் தெளியக்கூடும் என்ற அந்த பெண்ணின் பெற்றோர்கள் நம்புவதாயும், இங்கு இந்தப் பெண் உறக்கத்திலிருந்து விழித்தாலும் 21 வயதுப் பெண்ணாக இருக்க மாட்டாள் என்றும், ஏனெனில் 5 வயதில் நடைபெற்ற சத்திர சிகிச்சைக்குப் பிறகு பெண் வளரவே இல்லையென்றும் கூறப்படுகிறது.

அர்த்தாலுக்குப் பிறகு!

10—3—56 சனி மாலை 5 மணிக்கு

நுங்கம்பாக்கம்

இரயிலடிக்கு அருகிலுள்ள

தி. மு. க. திடலில்

★

பேசுவோர்:

அண்ணா
நெடுஞ்செழியன்
நடராசன்
மதியழகன்
கருணாநிதி
கண்ணதாசன்
கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து
அலமேலு - அப்பாதுரை

★

இன்னிசை:

இசைச்செல்வி ஜி. கஸ்தூரி — குடந்தை சீனிவாசன்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

'அணுசக்திக் கடிகாரம்'

கலாச்சாரங்களின் காலத்தை திட்டவட்டமாகக் கணிக்குமாம்!

சரித்திர காலத்துக்கு முற்பட்ட கலாசாரங்களின் காலத்தை மிகவும் திட்டவட்டமாய்க் கணிக்க அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு அணுக் கதிரியக்க கார்பன் உதவி செய்கிறதாம்!

'பாசில்களிலுள்ள கார்பன் அணுக்களின் சதவிகிதத்தைத் தெரிந்து கொண்டும், அந்தக் கார்பனின் சிதைவு விகிதத்தைக் கணக்கிட்டுப் பார்த்தும், ஒரு பசுடியோ, ஒரு மிருகமோ எவ்வளவு காலத்துக்குமுன் வாழ்ந்தது என்பதை ஒரு வரையறைக்கு உட்பட்டு விஞ்ஞானிகள் தீர்மானிக்க முடியுமாம்'

இந்தக் கார்பன் அணுக்களை விஞ்ஞானிகள் 'அணுசக்திக் கடிகாரங்கள்' என்று சொல்கிறார்கள்.

முன்னர் தோன்றியிருந்த கருத்துக்கு மிகவும் முற்பட்ட காலத்தில்—அதாவது 9,000 ஆண்டுகளுக்குமுன் வட அமெரிக்காவில் மக்கள் வாழ்ந்தார்கள் என்று விஞ்ஞானிகள் சமீபத்தில் செய்த ஆராய்ச்சி காட்டுகிறது.

கிழக்கு வங்க கவர்னராக பஸ்லுல் ஹக் நியமனம்

பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரியாயிருக்கும் ஏ. கே. பஸ்லுல் ஹக் கிழக்கு வங்க கவர்னராக நியமிக்கப் பட்டிருப்பதாய் கராச்சிச் செய்தி ஒன்று கூறுகிறது.

இப்போது பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் ஐக்கிய முன்னணிக் கட்சியின் தலைவராயிருக்கிறார், ஹக்.

மொத்தம் ரூ. 21,53,400 செலவில், தபால் போடுவதற்கான 20 சாதனங்களை வாங்குவதற்காக இந்திய சர்க்கார் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்; இந்தியாவில் நிலக்கரி இருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக அவை பயன்படுத்தப்படும்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.